# வளர்ந்து, நிரூபிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, அவருக்குள் வளருகிறவர்களாயிருந்து, அனுபவமுள்ளவர்களாயிருங்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும்

## (YOU MUST BE BORN AGAIN)

ஞாயிறு காலை, டிசம்பர் 31, 1961
பிரான்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில்,
இந்தியானா, அமெரிக்கா

149. நான் பிரசங்கம் பண்ணின முதலாவது பிரசங்கம் எனக்கு ஞாபகம் வருகிறது. நான் அங்கே எழுந்து நின்று, நான் மிக நன்றாக பிரசங்கம் பண்ணினதாக நான்-நான் எண்ணிக் கொண்டேன், வயதான சீமாட்டிகள் எல்லாரும் சுற்றிலும் உட்கார்ந்து

கொண்டிருந்தனர், அவர்கள் சற்று அழுதனர், உங்களுக்குத் தெரியும், "ஓ, என்னவொரு அற்புதமான பையன்" என்றனர்.

150. வயதான மேய்ப்பராகிய டாக்டர் டேவிஸ் அவர்கள் ஒரு வயதான வழக்கறிஞராயிருந்தார். நான் சென்றேன், அவர், "நான் உன்னை வீட்டில் சந்திக்க விரும்புகிறேன்" என்றார்.

151. நான், "சரி" என்றேன். அடுத்த நாள், நான் உள்ளே நடந்து சென்றேன், உங்களுக்குத் தெரியும், முழுவதும் பகட்டாரவாரம் கொண்டு, புதுப்பாணி நடையுடை தோற்றம், நான், "டாக்டர் டேவிஸ் அவர்களே, நான் எப்படி பிரசங்கம் பண்ணினேன்?" என்று கேட்டேன்.

“நான் எப்பொழுதும் கேட்டதிலேயே மிகவும் மோசமாக இருந்தது!” என்றார்.

நான், “என்ன?” என்றேன்.

அவர், “நான் எப்பொழுதும் கேட்டதிலேயே மோசமாக இருந்தது” என்றார்.

“ஓ,” நான், “சகோதரன் டேவிஸ் அவர்களே, எல்லாரும் அழுது கொண்டிருந்தார்களே” என்றேன்.

152. அவர், “ஆமாம், அவர்கள் அடக்க ஆராதனை களிலும் அழுகிறார்கள், குழந்தைகள் பிறக்கும் போதும் அழுகிறார்கள், மற்ற ஒவ்வொன்றிலுமே அழுகிறார்கள்” என்றார். அவர், “பில்லி, அது என்ன, நீ ஒருபோதும் தேவனுடைய

வார்த்தையில் ஒரு துளியளவும் மேற்கோள் காட்டவில்லையே. மரித்துப் போய் விட்ட யாரோ ஒரு தாயாரைக் குறித்து நீ பேசினாய், அல்லது இவ்விதமான ஏதோவொன்றைக் குறித்து பேசினாய், ஒவ்வொருவரும் அழும்படியாக ஆக்கினாய். நீ இந்த உலக காரியங்களின் பேரிலும், இந்த உலகத்தின் உணர்ச்சிகளின் பேரிலும் மறுபடியும் பிறக்கவில்லை, நீ வார்த்தையின் மூலமே பிறக்கிறாய்! பில்லி!" என்றார்.

153. ஓ, அவர் சரியாக என்னிடமிருந்து மிகுதியான, தேவையற்ற வெறும் சொற்களை வெட்டி நீக்கி விட்டார் (cut the wind). அவர் அப்படி செய்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். பாருங்கள்?

பாருங்கள்? மேலும் கீழும் குதிப்பதல்ல, உரக்க கத்துவதல்ல, அதுவல்ல அது. அது ஜீவிக்கச் செய்கிற வார்த்தையாகும். வார்த்தையானது உயிர்ப்பிக்கிறது. அனுபவங்கள் அல்ல; வார்த்தை தான்.

154. அவர், "பில்லி, நான் முயற்சித்த முதலாவது வழக்கு எனக்கு ஞாபகம் வருகிறது. நான் தண்டவாளத்திலேயே தோற்கடித்து விட்டேன். நான், 'இந்தப் பரிதாபகரமான பெண்ணைப் பாருங்கள்' என்றேன்" என்றார். ஓ, அவர், "'அவள் எவ்வாறு காணப்படுகிறாள் என்று பாருங்கள், அவளுடைய கணவன் அவளைக் கொடுமைப்படுத்தியிருக்கிறான்' என்றேன். நான் கொஞ்சம் அழுது

விட்டு, என்னுடைய கைக்குட்டையை எடுத்தேன், நான் மற்ற வழக்கறிஞர்களைப் போன்றே நடந்து கொண்டேன். நானும் அதே உணர்ச்சியினூடாகப் போவதாக எண்ணிக் கொண்டேன். மரியாதைக்குரிய நீதிபதி அவர்களே, நீர் ஏன் இவளுக்கு விவாகரத்து கொடுக்கக் கூடாது. அங்கே பாரும்! அவளுடைய கணவன் அவளை பின்னால் முதுகில் அடித்ததாக அவள் கூறுகிறாள்" என்றேன். அவரால் அதைப் பார்க்கக் கூட முடியவில்லை, அவளுடைய ஆடைகளுக்கு அடியில் கீழே அது இருந்தது. "அவர்கள் அவளை முதுகில் அடித்திருக்கிறார்கள். நீர் ஏன் அவளுக்கு... கொடுக்கமாட்டீர்"

என்றேன். அந்த வயதான நீதிபதி அப்படியே அங்கே அமர்ந்து கொண்டு, கவனித்துக் கொண்டிருந்தார்.

155. அப்போது மறுபக்கத்தில் நேராக உட்கார்ந்து கொண்டிருந்த அந்த வயதான வழக்கறிஞர், எழுந்து, "மரியாதைக்குரிய நீதிபதி அவர்களே, உம்முடைய நீதிமன்றத்தில் இந்த முட்டாள் இன்னும் எவ்வளவு (நேரம்) நின்று கொண்டிருப்பான்?" என்றார். அப்படியே அதிகமாக தொடர்ந்து பேசிக் கொண்டிருத்தல்.

156. அவ்விதமாகத்தான் அநேக ஜனங்கள் செய்கிறார்கள். அதை ஆதரிக்க அதற்குப் பின்னால் போதுமான வார்த்தை இல்லாமலே தொடர்ந்து அதிகமாகப் பேசிக்

கொண்டிருத்தல். வளர்ந்து முதிர்ச்சி அடைந்த நிலைக்கு வாருங்கள் (Grow up)! “ஓ, சகோதரன் பிரன்ஹாமே, அவன் சென்ற இரவு ஆவியில் நடனமாடினான். அவன் சரியாகத் தானே இருக்கிறான்” இல்லை, அது அவனை எனக்குச் சரியாக ஆக்குவதில்லை. இல்லை, ஐயா. வளர்ந்து, நிரூபிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, அவருக்குள் வளருகிறவர்களாயிருந்து, அனுபவமுள்ளவர்களாயிருங்கள்.

